**மாண்புமிகு துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 22/11/2025 அன்று மதுரை மாவட்டத்தில், அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**





● மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தைத் திறந்துவைத்தார்.







● மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தும், SARAS MELA கண்காட்சியை மதுரை தமுக்கம் மைதானத்தில் தொடங்கிவைத்தார்.







● மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 1000 மகளிர்க்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.







● மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச ஹாக்கி மைதானத்தைத் திறந்துவைத்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 276வது நாள்!

### துறைமுகம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!



சென்னை, நவ. 23-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 276 ஆம் நாளான - கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (22. 11.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, அம்மன் கோயில் தெரு, சடையப்பன் தெரு சந்திப்பு, ஏழு கிணறு, 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம்: 57 அ, அண்ணா பிள்ளை தெரு, டேவிட்சன் தெரு சந்திப்பு (லோன்ஸ்குயர் அருகில்), சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்டச் செயலாளர்கள்: எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### திரு.வி.க. நகர் தொகுதிக்குட்பட்ட

# 71, 72வது வார்டுகளில் எஸ்.ஐ.ஆர். பணிகள்!

### ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. - தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி ஆய்வு செய்தனர்!

சென்னை, நவ.23-

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டுப் படிவங்களை வாக்காளர்கள் பூர்த்தி செய்வதற்கு உதவிடும் வகையில், வாக்காளர் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி மையங்கள் 18.11.2025 முதல் 25.11.2025 வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை செயல்படும்.

அந்த வகையில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனையின்படி திரு.வி.க நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண், 71 மற்றும் 72 ஆகிய பகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம். எல். ஏ. மற்றும் தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் தண்டலம் என். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வார்டு எண் 71 க்கு உட்பட்ட பாகங்களான 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 ஆகியவற்றிற்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கும் மற்றும் வார்டு எண் 72 க்கு உட்பட்ட பாகங்களான 129, 130, 131, 132, 134, 135, 136, 137, 138, 139, 140, 141, 142, 143 ஆகியவற்றிற்கு உட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கும் நேரில் சென்று பொதுமக்களிடம் பெறப்பட்ட வாக்காளர் சேர்ப்பு படிவங்களை ஆய்வு செய்தனர்.

இந்நிகழ்வில் 71 வது வட்டச் செயலாளர் பரிமளா சுரேஷ்பாபு, பகுதி துணைச் செயலாளர் புல்லட் ரமேஷ், மாவட்ட பிரதிநிதி அண்ணாதுரை, பகுதி பிரதிநிதி

து .பிரகாசம், வட்ட துணைச் செயலாளர்கள் வினோத், ஜமுனா குணசேகர்,

பாகமுகவர்கள் சுரேஷ்பாபு, கஜேந்திரன் விவேக், யு.பாபு, ராமலிங்கம், பிரேம், ரவி, விநாயகம், மோகன்ராஜ் ரவிசங்கர், மணி, உஷா, BDA லதா பிரதீபா மற்றும் 72-வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.சரவணன்,

72வது வட்டச் செயலாளர் எம்.ஏ.டீக்கா மற்றும் கதிர்வேல், ரமேஷ், லோகு, மோகன சங்கர், ஆதித்யா, மணவாளன், எம். டி.அசோக், எஸ்.வைலா, ஏ.சுரேஷ், நாகராஜ்,

ரமேஷ்பாபு, ஏ.புவனவதி, ராஜசேகர், எஸ். சுரேஷ், பி.அரவிருத், டி. அபி, செந்தமிழ் செல்வன், ஜி.ராமு, ஜி.விஷால், தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எஸ். கௌதம், 73வது அ வட்ட துணை செயலாளர் ஆர். சுரேந்திரன், BLA 2 நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.